தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

759, அண்ணா சாலை, சென்னை–600 002

# மக்கள் சாசனம் 2019

தமிழக கைவினைஞர்களின் நலனை உறுதி செய்யவும் கைத்திறத் தொழிலை மேம்படுத்தி முன்னேற்றவும் 1973ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 'பூம்புகார்' என்ற வணிக பெயரில் புகழ் பெற்று விளங்கும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை இம் மக்கள் சாசனம் வெளிப்படுத்துகிறது.

**நோக்கம்**

தமிழக கைவினைஞர்களின் கடுமையான உழைப்பினால் பித்தளை, பஞ்சலோகம், மரம், கல், கலைத்தட்டுகள், தஞ்சாவூர் ஓவியங்கள், நெட்டி மாதிரிகள், காகிதக்கூழ், சுடுகளிமண் போன்றவற்றினால் உருவாக்கப்பட்ட சிறப்புத்தன்மை வாய்ந்த கைவினைப்பொருட்களை உலகம் முழுவதும் கொண்டு சேர்ப்பதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:–

**குறிக்கோள்கள்**

- தமிழ்நாடு கைவினைஞர்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்கைத் தரத்தை உயர்த்துதல்
- கைவினைஞர்களின் திறனை மேம்படுத்த உரிய பயிற்சிகள் அளித்தல்.
- கைவினைஞர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.
- கைவினை பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல்.
- கைத்திறப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் கடினத்தன்மையை களைதல்.
- கைத்திறத் தொழிலில் உள்ள இடர்பாடுகளை குறைத்தல் / நீக்கல்.
- வடிவமைப்புகளில் புதுமையை ஊக்குவித்தல்.
- கைவினைஞர்களுக்கு சமூக பொருளாதார பாதுகாப்பு அளித்தல்.
- மாநிலத்தில் கைத்திறன் வளமிக்க மையங்களை அடுத்த சந்ததியினருக்காக ஆவணமாக்குதல் மற்றும் பதிவு செய்தல்.
- தமிழக கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்.
- கைத்திறத் தொழிலில் கைவினைஞர்களின் விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பை அங்கீகரித்தல்

## 1. கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

பொது மக்களின் தேவைக்காக கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் பல்வேறு வகையான கைத்திறப் பொருட்களை தனது 13 விற்பனை நிலையங்கள், 3 துணை விற்பனை நிலையங்கள் வாயிலாகவும் மற்றும் உள்ளூர் பண்டிகைகள் மற்றும் முக்கிய தருணங்களை ஒட்டி உள்ளூர் மற்றும் வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் நடத்தப்படும் பல்வேறு கண்காட்சிகளின் மூலமாகவும் இந்நிறுவனம் விற்பனை செய்து வருகிறது. பூம்புகார் விற்பனை நிலையங்களின் முகவரி, தொலைபேசி எண்கள் மற்றும் மின் அஞ்சல் முகவரி இணைப்பு 2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் கைவினைஞர்கள் தங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை பூம்புகார் விற்பனை நிலையங்கள் மூலமாகவும் மற்றும் இக்கழகம் ஏற்பாடு செய்யும் பல்வேறு கண்காட்சிகளின் மூலமாகவும் விற்பனை செய்ய இணைப்பு 1 மற்றும் 2ல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அணுகலாம்.

சந்தை வாய்ப்பை மேலும் ஊக்குவிக்கும் விதமாக பூம்புகார் நிறுவனம் www.poompuhar.org என்ற மின் வணிக தளத்தினை 15.11.2014–ல் துவக்கியது. மேலும் ஸ்மார்ட் போன் மற்றும் ஐபேட்களில் பூம்புகாருக்கென உருவாக்கப்பட்ட உயர்திறன் பயன்பாட்டினையும் (Hybrid App) துவக்கியுள்ளது.

விற்பனை நிலையங்கள், கண்காட்சிகள் மற்றும் மின்வணிகம் மூலமாக கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதுடன் இந்நிறுவனம் கன்னியாகுமரி மற்றும் மாமல்லபுரத்தில் ஒரு நிரந்தர கண்காட்சி திடலை அமைத்துள்ளது. மற்றும் ஒரு நிரந்தர கண்காட்சி திடலை உதகமண்டலத்தில் ஏற்படுத்த துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கைவினைஞர்கள் தங்களுடைய பொருட்களை நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்ய இந்த நிரந்தர கண்காட்சி திடல்களின் மூலம் வசதி செய்யப்பட்டுள்ளது.

3D வடிவமைப்பு மற்றும் அச்சு தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஒரு வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் ஒன்றினை நிறுவியுள்ளது.

நமது கைவினைஞர்கள் பற்றிய இணையதள அடிப்படையிலான மின் கருவூலம் www.tnartisaan.com ஒன்றினை அமைக்கும் பணியினை இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. தற்போது கைவினைஞர்கள் இடைத்தரகர்களை நாடாமலேயே உலகளாவிய சந்தையில் ஈடுபட இயலும்.

## அ) நகர்புற கண்காட்சி திடல்கள்

**<u>கன்னியாகுமரி:</u>**

இந்நிறுவனம் கன்னியாகுமரியில் ரூ.**2.45** கோடிகள் செலவு மதிப்பீட்டில் ஒரு நிரந்தர கண்காட்சி திடல் அமைக்கும் பணியை மேற்கொண்டது. இதில் மத்திய அரசு பங்கு ரூ.**140.00** இலட்சங்கள், மாநில அரசு பங்கு ரூ.**60.00** இலட்சங்கள் மற்றும் இதர அரசு நிறுவனங்களின் பங்கு ரூ.**45.00** இலட்சங்கள் ஆகும். இந்த கண்காட்சித்திடல் **36** கடைகள், உணவுக் கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகன நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டிருக்கிறது. இக்கண்காட்சித்திடல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **08.03.2017** அன்று துவக்கி வைக்கப்பட்டது.

**<u>மாமல்லபுரம்:</u>**

மேலும் மாமல்லபுரத்தில் இதேபோன்று ஒரு நகர்ப்புற திடல் ரூ.**5.00** கோடி மதிப்பீட்டில் அமைத்துள்ளது. இதில் மத்திய அரசு பங்கு ரூ.**210.00** இலட்சங்கள், மாநில அரசு பங்கு ரூ.**190.00** இலட்சங்கள். இந்த கண்காட்சித்திடல் **36** கடைகள், உணவுக் கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகன நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டிருக்கிறது. இக்கண்காட்சித்திடல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **08.03.2018** அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இந்த கண்காட்சி திடலில் பங்குபெற விரும்பும் கைவினைஞர்கள் மேலாளர், பூம்புகார் விற்பனை நிலையம், கன்னியாகுமரி, மாமல்லபுரம் மற்றும் தலைமை அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

## ஆ) ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி

இந்திய அரசினால் அறிவிக்கப்பட்ட மற்றும் ஒரு முக்கிய திட்டம் ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சியாகும். சிறந்த பணிக்கான சூழ்நிலை, திறன் மேம்பாடு, சந்தை வசதி, புதிய வடிவமைப்புக்களை அறிமுகப்படுத்துதல் போன்ற வசதிகளை கைவினைஞர்களுக்கு இரண்டு ஆண்டுகளில் வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்திய அரசு இத்திட்டத்தின்கீழ் ரூ.**20.38** கோடிகளுக்கு இந்நிறுவனத்திற்கு அனுமதி வழங்கி உள்ளது. இத்திட்டத்தில் இந்திய அரசின் பங்கு ரூ.**16.52** கோடி மற்றும் தமிழக அரசின் பங்கு ரூ.**3.86** கோடி மொத்தம் ரூ.**20.38** கோடிகளாகும்.

இத்திட்டம் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாகும்:-

| வ.எண் | திட்டத்தின் பெயர் | எண்ணிக்கை | பெறப்பட்டத் தொகை (ரூ. கோடிகளில்) |
|---|---|---|---|
| 1. | பொது வசதி மையம் | 13 | 7.80 |
| 2. | வடிவமைப்பு கருத்தரங்கு | 41 | 1.89 |
| 3. | ஒருங்கிணைந்த பயிற்சி | 12 | 1.77 |
| 4. | உபகரணப் பொருட்கள் | 10000 கைவினைஞர்கள் | 5.00 |
| 5. | கண்காட்சிகள் | 34 | 3.62 |
| 6. | உற்பத்தியாளர்/நுகர்வோர் கூட்டம் | 2 | 0.30 |
| | **மொத்தம்** | | **20.38** |

மேற்கண்ட திட்டங்களின் மூலம் பயனடைய விரும்பும் கைவினைஞர்கள் இணைப்பு 1, 2 மற்றும் 3 இல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அணுகலாம்.

## இ) கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பு

தமிழக அரசு மாநில புதுமை முயற்சி திட்டத்தின்கீழ் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பு களஞ்சியம் ஏற்படுத்த ரூ.1.00 கோடி நிதி வழங்கியுள்ளது. இது தமிழக கைவினைஞர்கள் அனைவருக்கும் நிலையான வடிவமைப்புடன் ஒவ்வொரு கைவினைஞருக்கும் தனி மின் பக்கங்களை கொண்ட மேம்படுத்தப்பட்ட, ஆற்றல் வாய்ந்த, புரிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட மின் தொகுப்பு ஆகும். இம் மின் தொகுப்பின் மூலம் குறைந்த வருவாய் உடைய கைவினைஞர்கள் உயர்வு அடைவார்கள். தற்போது இந்நிறுவனம் 13,000 கைவினைஞர்களின் விபரங்களை பதிவு செய்துள்ளது. இதன் மூலம் இடைத்தரகர்களின்றி உலக மக்கள் கைவினைஞர்களுடன் நேரடி தொடர்பு கொள்ள முடியும். இத்தொகுப்பில் கைவினைஞர்கள் வாரியாக, கைவினைஞர்களின் உற்பத்தி செய்யும் பொருட்கள் வாரியாக, சாதி வாரியாக, பாலின வாரியாக விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. மலைவாழ் கைவினைஞர்களையும் இத்தொகுப்பில் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கணினியில் இக்கைவினைஞர்களை கண்டறிய முடியும். இந்த மின் தொகுப்பில் உறுப்பினராக இணைய www.tnartisaan.com இணையதளத்தை தொடர்பு கொள்ளவும். இம்மின் தொகுப்பில் உறுப்பினராக இணைப்பு 2 மற்றும் 3 இல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அணுகலாம்.

**2. கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல்**

இக்கழகம், பித்தளை விளக்குகள், பஞ்சலோக சிலைகள், கலைத்தட்டுகள், மரச்சிற்பங்கள் மற்றும் கற்சிற்பங்கள் போன்றவற்றை தயாரிக்கும் உற்பத்தி நிலையங்களை நாச்சியார்கோவில், வாகைகுளம், மதுரை, சுவாமிமலை, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் செயல்படுத்தி வருகிறது. உற்பத்தி நிலையங்களின் முகவரிகள், தொலைபேசி எண்கள், மற்றும் மின் அஞ்சல் முகவரிகள், இணைப்பு–3ல் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த உற்பத்தி நிலையங்கள் மூலமாக கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது. வேலை வாய்ப்பு தேடும் கைவினைஞர்கள் மேற்படி கைத்திறத் தொழில்களில் ஒன்றில் வாய்ப்பு பெற இணைப்பு 1 மற்றும் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை அணுகலாம்.

**3. பயிற்சி**

கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்யும் திறனை மேம்படுத்திக் கொள்வதற்காக இக்கழகம் 5 மாதம் / 2 மாதம் பயிற்சிகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடத்த ஏற்பாடு செய்து வருகிறது. இத்தகைய கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான திறமைகளைப் பெற ஆர்வமுள்ளவர்கள் காலமுறைதோறும் இக்கழகம் ஏற்பாடு செய்யும் பயிற்சித் திட்டங்களில் சேரலாம். இதன் மூலம் கைத்திறத் தொழில்களில் திறமைகளை வளர்த்துக்கொண்டு கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்வதை தொழிலாக மேற்கொள்ளலாம். பயிற்சிக் காலங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதந்தோறும் ரூ.7500/– உதவித் தொகையாக இந்நிறுவனம் வழங்கி வருகிறது.

**4. கைவினைஞர்களுக்கு பாராட்டு**

**(அ) <u>இந்திய அரசின் சில்ப் குரு விருது மற்றும் தேசிய விருது</u>**

சில்ப் குரு விருது, இந்திய அரசினால் வருடந்தோறும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருது ஆகும். இதுவரை தமிழ்நாட்டைச் சார்ந்த **ஐந்து** தலை சிறந்த கைவினைஞர்களுக்கு சில்ப் குரு விருது வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்திய அரசு வருடந்தோறும் சிறந்த கைவினைஞர்களுக்கு தேசிய விருதுகளை வழங்கி வருகிறது. இவ்விருது ரூ.1.00 லட்சம் ரொக்கப் பரிசு, ஒரு தாமிரப் பத்திரம் மற்றும் ஒரு அங்கவஸ்திரத்தினை கொண்டதாகும். இவ்விருதுகள் மேதகு இந்திய குடியரசு

தலைவர் அவர்களால் வழங்கப்படுவதாகும். இதுவரை தமிழ்நாட்டை சார்ந்த 28 சிறந்த கைவினைஞர்களுக்கு தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருதுக்கான தகுதியுடையவரை தேர்ந்தெடுக்க தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், அபிவிருத்தி ஆணையர் (கைத்திறன்) அலுவலகம், இந்திய அரசு, புதுடெல்லியுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

**ஆ) ''வாழும் கைவினைப் பொக்கிஷம்'' விருது**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்ட பேரவை விதி 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பின்படி 65 வயதுக்கு மேற்பட்ட திறன்மிகு கைவினைஞர்களுக்கு, ''வாழும் கைவினைப் பொக்கிஷம்'' என்ற விருது 2013–2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது தலா ரூ.1.00 லட்சம் ரொக்கப்பரிசு, 8 கிராம் தங்க பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழும் கொண்டதாகும். இவ்விருது 10 கைவினைஞர்களுக்கு ரூ.15.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகிறது.

**Ï) ó«òfh® khãy éUJ**

தமிழகத்தில் கைத்திறன் மேம்பாட்டுக்காக பங்களிப்பு செய்த சிறந்த 10 கைவினைஞர்களை தேர்வு செய்து இந்நிறுவனம் வருடந்தோறும் பூம்புகார் மாநில விருதுகளை வழங்கி வருகிறது. இவ்விருதுகள் ரூ.50,000/– ரொக்க பரிசு, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிர பத்திரம் மற்றும் தகுதிச் சான்றிதழும் கொண்டதாகும். இவ்விருது பெற்ற கைவினைஞர்கள் 60 வயது அடைந்தவுடன் பொருளாதாரத்தில் பின்தங்கியவராக இருக்கும் பட்சத்தில் இந்திய அரசால் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.3,500/– பெற தகுதி உடையவராகிறார்கள்.

**<) ó«òfh® kht£l if¤Âw‹ éUJ**

2011–2012 ஆம் ஆண்டு முதல் *''பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது''* என்ற புதிய விருது அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ரொக்கப்பரிசு ரூ.10,000/–, ஒரு வெள்ளி பதக்கம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும். ஒவ்வொரு ஆண்டும் 16 கைத்திறத் தொழில்களிலிருந்து 85 கைவினைஞர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. பெண் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களுடைய சுய சார்பினை உறுதிப்படுத்தும் வகையிலும் மொத்த விருதில் 17 விருதுகள் பெண் கைவினைஞர்களுக்கு வழங்கப்படுகிறது.

**c) mL¤j jiyKiw ifélidP®fS¡fhd éUJ**

தமிழ்நாட்டின் பாரம்பரியம் மிக்க கைத்திறத் தொழில்கள் நீடித்திருக்கவும் அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வதற்கும் இளைஞர்களை இத்துறையில் ஊக்கப்படுத்துதல் அவசியமாகிறது. இதனை செயல்படுத்தும் வகையில் 2013–2014–ஆம் ஆண்டு முதல் 30 வயதிற்குட்பட்ட இளம் கைவினைஞர்களுக்கு இக் ‘‘கைத்திறன் போட்டி’’, அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போட்டியில் 150 கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ரூ.2000/– ரொக்க பரிசு, வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுகிறார்கள். இப்போட்டிகள் முக்கிய கைத்திறப் பொருட்களின் மையங்களில் நடத்தப்படும்.

**C) ifélid¥ bghU£fŸ V‰WkÂ éUJ**

தமிழ்நாடு கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு “கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது” 2014–2015–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ரூ.2.50 இலட்சம் செலவில் ஒவ்வோர் ஆண்டும் இரு நபர்களுக்கு வழங்கப்படும்.

இவ்விருது ரூ.40,000/– ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

**v) FG c‰g¤Â éUJ**

கைவினைப் பொருட்கள் கைவினைஞர்களைக் கொண்ட ஒரு குழுவினரால் தயாரிக்கப்படுகிறது. இக்குழுவில் தனிப்பட்ட ஒரு கைவினைஞரை விருதுக்காக இனம் காண்பது கடினமான செயலாகும். எனவே ஒரு குழுவாக பணிபுரிந்து ஒரு பொருளைத் தயாரித்த குழுவினரை கௌரவிக்கும் நோக்கில் “குழு உற்பத்தி விருது” அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ஒவ்வொரு ஆண்டும் 3 குழுக்களுக்கு ரூ. 3.75 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது

இவ்விருது ரூ.40000/– ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

**V) ga‹ghL rh®ªj ifélid¥ bghU£fŸ éUJ**

கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் பல கலைப்படைப்புகளும் பெரும்பாலும், அலங்காரம் சார்ந்தோ அல்லது மதம் சார்ந்தோ அமைகின்றன. எனவே பயன்பாடு சார்ந்த பொருட்களைத் தயாரிக்க கைவினைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில், "பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது" அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ஆண்டுதோறும் 3 கைவினைஞர்களுக்கு ரூ.3.75 லட்சம் செலவில் வழங்கப்படுகிறது.

இவ்விருது ரூ.40,000/– ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

மேற்கண்ட எட்டு விருதுகளும் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட கைவினைஞர்களுக்கு வழங்கப்படுகிறது. விருதுகளுக்கான தகவல்களை பெற இணைப்பு 1–ல் குறிப்பிடப்பட்ட அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

**5. கைவினைஞர்கள் தினம்:**

அழகிய கைத்திறப் பொருட்களின் மேல் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி பெருமளவு சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும், வருடந்தோறும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுகளை ஒரே நாளில் தமிழகம் முழுவதும் வழங்கவும், கைவினைஞர்களை போற்றும் விதமாக தமிழ்நாடு அரசின் நிதியுதவி ரூ.35.00 இலட்சம் செலவில் ஒவ்வொரு ஆண்டும் "**மார்ச் 5–ஆம்**" நாள் "**கைவினைஞர்கள் தினமாக**" தமிழகம் முழுவதும் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் கைவினைஞர்கள் தினம் சென்னை கலைவாணர் அரங்கத்தில் 08.03.2018 அன்று கொண்டாடப்பட்டது.

**6. கைவினைஞர்களுக்கான நலதிட்டங்கள்**

**கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல்**

- இந்நிறுவனம் தன்னுடைய உற்பத்தி நிலையங்கள் மூலமாக கைவினைஞர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினை அளிக்கிறது.
- இந்நிறுவனத்தின் சிறப்பு திட்டங்கள் வாயிலாகவும் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.
- இந்நிறுவனம் தனது விற்பனை நிலையங்கள், கண்காட்சிகள் மற்றும் மின் வணிகம் மூலம் இவர்களுடைய பொருட்களை விற்பனை செய்து வருவதன் மூலம், மறைமுகமாக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி தருகிறது.

**7. கைவினைஞர்களுக்கு இலவச உபகரணங்கள் வழங்குதல்**

பூம்புகார் நிறுவனம், ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி திட்டத்தின் மூலமாக ரூ. 5,000 மதிப்புள்ள இலவச உபகரணங்கள் 10,000 கைவினைஞர்களுக்கு வழங்கி வருகிறது. அபிவிருத்தி ஆணையர், (கைவினைப்பொருட்கள்) புதுடெல்லி அலுவலகம் மூலம் வழங்கப்படும் கைவினைஞர் அடையாள அட்டை (Pechaan card) உள்ளவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம்.

**8. பொது பயன்பாட்டு மையங்கள்**

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி திட்டத்தின் மூலமாக 13 பொது பயன்பாட்டு மையங்கள் ரூ. 780.00 இலட்சங்கள் செலவில் பல்வேறு கைத்திறத்தொழில்களில் அமைக்க உள்ளது. இதில் 6 பொது பயன்பாட்டு மையங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 08.03.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இதேபோன்று தமிழக அரசின் நிதி உதவியில் நலிந்த கைத்திறத் தொழில்களான பனை ஒலை, கோரைபாய், களிமண் மற்றும் சுடுகளிமண் ஆகிய கைத்திறத்தொழில்களில் ரூ.188.00 இலட்சங்கள் செலவில் 4 பொது பயன்பாட்டு மையங்கள் அமைக்க உள்ளது.

இந்த பொது பயன்பாட்டு மையங்களில் கைவினைஞர்களுக்கு தேவையான நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளது. எனவே தேவைப்படும் கைவினைஞர்கள் இலவசமாக பயன்படுத்தி கைவினைப்பொருட்களை எளிதாக உற்பத்தி செய்து பயன் பெறலாம்.

**இணைப்பு–1**

## தலைமை அலுவலகம்

| வ. எண் | ஒப்பிய பொறுப்பு | அணுக வேண்டிய அதிகாரி | அலுவலக விலாசம்/மின் அஞ்சல் |
|---|---|---|---|
| 1 | சந்தை வாய்ப்பு ஆதரவு, கண்காட்சி மற்றும் மின் வணிகம் | விற்பனை மேலாளர் தொலைபேசி எண் 044–28518716 / 28521325 28525094 | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 759, அண்ணா சாலை, சென்னை–600 002<br><br>மின் அஞ்சல்:- tamilnaduhandicrafts@yahoo.co.in<br><br>மின்வணிகம் :– www.poompuhar.org<br><br>இணையதளம்:- www.tnhdcltd.com |
| 2 | பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகள் | உற்பத்தி மேலாளர் தொலைபேசி எண் 044–28414408/ 28521325 28525094 | |
| 3 | கைவினைஞர்கள் மற்றும் அவர்களின் திறமைக்கான மின் தொகுப்பு | உதவி மேலாளர் (தகவல் தொழில்நுட்ப பிரிவு) 044 –28521325/ 28525094 | |
| 4 | விருதுகள் | உதவி மேலாளர் (மேம்பாட்டு பிரிவு) 044 –28521325/ 28525094 | |
| 5 | பொது தகவல் அலுவலர் | பணி மேலாளர் 044–28521271 / 28521325 | |

**இணைப்பு–2**

**விற்பனை நிலையங்கள்**

| **வ.எண்** | **அணுக வேண்டிய அலுவலர்** | **அலுவலக விலாசம்** |
|---|---|---|
| 1 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>108, அண்ணா சாலை,<br>சென்னை – 600 002<br>தொலைபேசி எண் 044 – 28520624 / 28550157<br>மின் அஞ்சல் – poompuharshowroom@gmail.com |
| 2 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>மேற்கு புலிவார் சாலை,<br>சிங்காரதோப்பு,<br>திருச்சி – 620 008<br>தொலைபேசி எண் 0431 – 2704895<br>மின் அஞ்சல் – poompuhartrichy@gmail.com<br>poompuhartrichy@hotmail.com |
| 3 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>மங்கம்மாள் சத்திர கட்டிடங்கள்<br>இரயில்வே சந்திப்பு எதிரில்,<br>12 மேற்கு வெளி வீதி,<br>மதுரை – 625 001<br>தொலைபேசி எண் 0452 – 2340517<br>மின் அஞ்சல் – poompuharmadurai@gmail.com |
| 4 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>இரயில்வே ஸ்டேஷன் சாலை,<br>தஞ்சாவூர் – 613 001<br>தொலைபேசி எண் 04362 – 230060<br>மின் அஞ்சல் – poompuharthanjavur@gmail.com |
| 5 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கடற்கரை கோயில் சாலை,<br>மாமல்லபுரம் – 603 104<br>தொலைபேசி எண் 044 – 27442224 |
| 6 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>அண்ணா பட்டு மாளிகை,<br>காதிகிராப்ட் பில்டிங்<br>திருவள்ளுவர் சிலை அருகில்<br>சேலம் – 636 001<br>தொலைபேசி எண் 0427 – 2414994<br>மின் அஞ்சல் – pssrsalem@gmail.com |
| 7 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>1239, பெரிய கடைவீதி,<br>கோயம்புத்தூர் – 641 001<br>தொலைபேசி எண் 0422 – 2391055<br>மின் அஞ்சல் – poompuharcbe@yahoo.co.in |

| வ.எண் | அணுக வேண்டிய அலுவலர் | அலுவலக விலாசம் |
|---|---|---|
| 8 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>1154, மேட்டூர் சாலை,<br>ஈரோடு – 638 001<br>தொலைபேசி எண் 0424 – 2254885<br>மின் அஞ்சல் – poompuhARerode@gmail.com |
| 9 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கலைமகள் இல்லம், சன்னதி தெரு,<br>கன்னியாகுமரி – 629 702<br>தொலைபேசி எண் 04652 – 246040<br>மின் அஞ்சல் – poompuharcape@gmail.com |
| 10 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>திரவலஞ்சுழி பிரதான சாலை,<br>சுவாமிமலை – 612 302.<br>தொலைபேசி எண் 0435 – 2454442<br>மின் அஞ்சல் – papcswamimalai@gmail.com |
| 11 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>சி–1, ஸ்டேட் எம்போரியா காம்ப்ளெக்ஸ்,<br>இர்வின் சாலை, பாபா கரக் சிங் மார்க்,<br>புதுடெல்லி – 110 001<br>தொலைபேசி எண் 011 – 23363913<br>மின் அஞ்சல் – tnhandicrafts@yahoo.com |
| 12 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கடை எண் 21–22 முதல் தளம்,<br>சி.ஐ.டி ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்,<br>எண் 2 காரியாஉறாட் சாலை,<br>கொல்கத்தா – 700 068<br>தொலைபேசி எண் 033 – 24237028<br>மின் அஞ்சல் – pssrkolkata@gmail.com |
| 13 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கடை எண் 139, சுவாமி நெல்லையப்பர் நெடுஞ்சாலை,<br>திருநெல்வேலி சந்திப்பு,<br>திருநெல்வேலி – 627 001.<br>தொலைபேசி எண் 0462 – 2333391<br>மின் அஞ்சல் – poompuharcape@gmail.com |

## இணைப்பு–3

## உற்பத்தி நிலையங்கள்

| வ.எண் | அணுக வேண்டிய அலுவலர் | அலுவலக விலாசம் |
|---|---|---|
| 1 | மேலாளர் (உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) | பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கல பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>நாச்சியார் கோவில் – 612 602<br>தஞ்சாவூர் மாவட்டம்<br>தொலைபேசி எண் 0435 – 2466553<br>மின் அஞ்சல் – bbmpnachiarkoil@gmail.com |
| 2 | மேலாளர் (உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>திருவலஞ்சுழி, பிரதானசாலை,<br>சுவாமிமலை – 612 302, தஞ்சாவூர் மாவட்டம்<br>தொலைபேசி எண் 0435 – 2454442<br>மின் அஞ்சல் – amtcswamilai@gmail.com |
| 3 | மேலாளர் (உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) | பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கலப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>மன்னார் கோயில் அஞ்சல்,<br>அம்பாசமுத்திரம் (வழி)<br>வாகைக்குளம் – 627 413 திருநெல்வேலி மாவட்டம்<br>தொலைபேசி எண் 04634 – 250476<br>மின் அஞ்சல் – bmpcvagaikulam@gmail.com |
| 4 | மேலாளர் (உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>ரயில்வே ஸ்டேஷன் ரோடு,<br>தஞ்சாவூர் – 613 001<br>தொலைபேசி எண் 04362 – 236050<br>மின் அஞ்சல் – papcthanjavur@gmail.com |
| 5 | மேலாளர் (உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>தொழிற்பேட்டை, மதுரை – 625 007<br>தொலைபேசி எண் 0452 – 2566774<br>மின் அஞ்சல் – pbapcmadurai@gmail.com |
| 6 | மேலாளர் (உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) | பூம்புகார் சந்தன மரச்சிற்பங்கள் உற்பத்தி நிலையம்,<br>54–55 சிட்கோ தொழிற்பேட்டை,<br>கச்சிராப்பாளையம் சாலை,<br>கள்ளக்குறிச்சி – 606 202<br>தொலைபேசி எண் 04151 – 222508 |
| 7 | மேலாளர் (உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) | பூம்புகார் கற்சிற்ப நிலையம்,<br>கடற்கரை கோயில் சாலை,<br>மாமல்லபுரம் – 603 104<br>தொலைபேசி எண் 044 – 27443224 |